

# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.சி.ஆர்.எம். தினேஷ்ராஜன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், கட்டமைப்புகளின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 20.06.2025 | ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம் | வீரியம்பட்டி கூட்ரோடு, வெங்கடதாம்பட்டி. | சேலம் சுஜாதா ர.ராஜேஷ் |
| 2 | | பர்கூர் வடக்கு ஒன்றியம் | மிட்டப்பள்ளி, பாலிநாயனப் பள்ளி | பையூர் இளையராஜா வே.சீனிவாசன் |
| 3 | | காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் | குட்டப்பட்டி கூட்ரோடு, பன்னிஹள்ளி புதூர் | பசும்பொன் ரவிச்சந்திரன் சே.ஆனந்த சைனி |
| 4 | 21.06.2025 | ஊத்தங்கரை மத்திய ஒன்றியம் | பாவக்கல் | பசும்பொன் ரவிச்சந்திரன் சே.ஆனந்த சைனி |
| 5 | | நாகரசம்பட்டி பேரூர் ஒன்றியம் | என்.தட்டக்கல் | சேலம் சுஜாதா எஸ்.பவித்ரா |
| 6 | 22.06.2025 | போச்சம்பள்ளி ஒன்றியம் | மகாதேவன கொள்ளஅள்ளி, அனக்கொடி | அப்துல் ரகுமான் பாரி எஸ்.பவித்ரா |
| 7 | | கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றியம் | பையனப்பள்ளி | கனல் சுப்பிரமணி வே.ஆனந்த சைனி |
| 8 | 23.06.2025 | மத்தூர் தெற்கு ஒன்றியம் | கெரிகப்பள்ளி | ஜான் சுந்தர்ராஜ் வே.சீனிவாசன் |
| 9 | | பர்கூர் தெற்கு ஒன்றியம் | கொத்தபள்ளி, ஐங்குந்தம் | லயோலா ராஜசேகர் கு.முரளிகிருஷ்ணன் |
| 10 | | கிருஷ்ணகிரி மேற்கு ஒன்றியம் | பாஞ்சாலியூர், வெங்கடாபுரம் | செந்தாமரைக்கண்ணன் எஸ்.பவித்ரா |
| 11 | 24.06.2025 | மத்தூர் வடக்கு ஒன்றியம் | மலையாண்டஹள்ளி | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 12 | | காவேரிப்பட்டணம் கிழக்கு ஒன்றியம் | நெடுங்கல் | கனல் சுப்பிரமணி வே.சீனிவாசன் |
| 13 | | கிருஷ்ணகிரி மேற்கு நகரம் | சென்ட்ரல் தியேட்டர், லண்டன்பேட்டை. | அப்துல் ரகுமான் பாரி சே.ஆனந்த சைனி |
| 14 | 25.06.2025 | பர்கூர் பேரூர் | எம்.ஜி.ஆர். நகர் | பையூர் இளையராஜா சி.பவித்ரா |
| 15 | | காவேரிப்பட்டணம் மேற்கு ஒன்றியம் | வெங்கடாபுரம், பாஞ்சாலியூர். | தருமபுரி அதியமான் கு.முரளிகிருஷ்ணன் |
| 16 | 26.06.2025 | காவேரிப்பட்டணம் பேரூர் | பேருந்து நிலையம், காவேரிப்பட்டணம் | லயோலா ராஜசேகர் ர.ராஜேஷ் |
| 17 | | கிருஷ்ணகிரி கிழக்கு நகரம் | பாரதிதாசன் தெரு, 29.வது வார்டு, கிருஷ்ணகிரி. | கந்திலி கரிகாலன் எஸ்.பவித்ரா |

கலைஞர் 100 1924 - 2023



**கிருஷ்ணகிரி**

நாள் : 19-06-2025

# திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு முன்னேற்பாடு பணிகள்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார்!

திருச்செந்தூர், ஜூன் 20- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (19.06.2025) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் வருகின்ற 07.07.2025 அன்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டுப் பெருவிழா நடைபெற உள்ளதை முன்னிட்டு, திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகள், யாகசாலை அமைக்கும் பணிகள், திருக்கோயிலின் மேல்தளத்தின் உறுதித்தன்மை, குடமுழுக்கிற்கு வருகை தரும் பக்தர்களுக்கான தேவையான அடிப்படை வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் முன்னேற்பாடு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு ஹெச்.சி.எல். நிறுவனத்தின் மூலம் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட இருந்த திருப்பணிகளுக்கு பல ஆண்டுகளாக அனுமதி வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த நிலையில் முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு தான் அதற்குண்டான அனுமதியை வழங்கி திருப்பணிகள் தொடங்கப்பட்டதை அனைவரும் நன்றாக அறிவீர்கள். மேலும், இத்திருக்கோயிலுக்கு 25 ஆண்டுகளுக்கு பிறகு பக்தர்கள் கூட்டம் எந்த அளவு கூடுமோ அவற்றையெல்லாம் கணக்கிட்டு, தேவைப்படுகின்ற உள்கட்டமைப்புகளை ஏற்படுத்திடும் வகையில் பெருந்திட்ட வரைவை (மாஸ்டர் பிளான்) தயாரித்து சுமார் 400 கோடி ரூபாய் அளவிற்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருச்செந்தூர் திருக்கோயிலுக்கு 15 ஆண்டுகளுக்கு பிறகு வருகின்ற 07.07.2025 அன்று நடைபெற உள்ளது. பெருந்திட்ட வரைவில் எடுத்துக்கொள்ளப்பட்ட பணிகளில் குடமுழுக்கிற்கு முன் முடிக்கப்பட வேண்டிய திருப்பணிகள், குடமுழுக்கு முடிவுற்றபின் மேற்கொள்ளும் திருப்பணிகள் என துறையின் மூலம் பட்டியலிட்டு பக்தர்களுக்கும் பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களுக்கும் தெரிவிக்க இருக்கின்றோம். இன்றைய தினம் திருக்கோயிலின் கிழக்கு இராஜ கோபுரம், பிற சன்னதிகள், திருக்கோயிலின் மேல்தளம் ஆகியவற்றின் உறுதி தன்மையை பரிசோதித்து குடமுழுக்கு அன்று எவ்வளவு நபர்களை அங்கே அனுமதிக்கலாம் என்று ஆய்வினை மேற்கொண்டோம். பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு மூன்று இடங்களை தேர்வு செய்திருக்கின்றோம். 1,500 பேருந்துகள் வந்தாலும் அந்த இடங்களிலே நிறுத்துகின்ற அளவில் வசதியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம். அந்த இடங்களில் குடமுழுக்கு பெருவிழாவை காணும் வகையில் அகண்ட திரைகள் அமைக்கப்படுவதோடு, பக்தர்களுக்கு தேவையான குடிநீர், கழிப்பிட வசதி, போதிய மின் விளக்குகள், அத்தியாவசியமாக தேவைப்படும் பொருட்கள் மற்றும் உணவு வகைகள் கிடைத்திடும் வகையில் சிறு, சிறு கடைகள் போன்றவற்றையும் ஏற்படுத்த திட்டமிட்டு இருக்கின்றோம்.

இத்திருக்கோயிலில் ஏற்கனவே இருக்கின்ற விதிகளின் படி ஜூலை மாதம் ஆறாம் தேதி மதியத்திற்கு பிறகு ஏழாம் தேதி குடமுழுக்கு நன்னீராட்டு முடிந்த பிறகு நான்கு மணி நேரம் கழித்து தான் பக்தர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்பது ஏற்கனவே இருக்கின்ற நடைமுறை என்று தலைமை குருக்கள் தெரிவித்துள்ளது குறித்தும் கலந்தாலோசித்தோம். இந்த குடமுழுக்கிற்கு அதிக எண்ணிக்கையில் பக்தர்களும், பொதுமக்களும் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டுதோறும் இங்கு நடைபெறும் சூரசம்ஹாரத்துக்கு 5 லட்சம் பக்தர்கள் வருகை தந்திருந்த போதிலும் அவர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளையும், போக்குவரத்து வசதிகளையும் தொடர்ந்து அரசின் சார்பிலும், துறையின் சார்பிலும் ஏற்பாடு செய்து தந்துள்ள முன் அனுபவம் இருப்பதால் இந்தக் குடமுழுக்கையும் சிறப்பாக நடத்துவோம். தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்து 24 மணி நேரமும் இந்த குடமுழுக்கிற்கான அடிப்படை வசதிகளை கணக்கிட்டு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த குடமுழுக்கு பெருவிழாவினை முன்னிட்டு சிறப்பு ஏற்பாடாக ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள 314 கழிவறை வசதிகளோடு, கூடுதலாக 510 தற்காலிக கழிப்பிட வசதிகளை ஏற்படுத்த இருக்கின்றோம். ஒரு நாளோடு நின்று விடாமல் தொடர்ந்து திருக்கோயிலுக்கு வருகின்ற பக்தர்கள் கூட்டம் சராசரி அளவை எட்டுகின்ற வரை இந்த கழிப்பிட வசதிகளை பயன்படுத்த திட்டமிட்டு இருக்கின்றோம்.

அதேபோல் திருச்செந்தூரில் ஏற்கனவே 455 பேருந்துகள் பயன்பாட்டில் இருக்கின்றன அதோடு சேர்த்து கூடுதலாக சுமார் 400 பேருந்துகளை சுழற்சி முறையில் இயக்குவதற்கு திட்டமிட்டு இருக்கின்றோம். 30 இடங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள், 18 தற்காலிக வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் தற்காலிக பேருந்து நிறுத்தும் இடங்களையும் ஏற்பாடு செய்திருக்கின்றோம். தூய்மைப் பணிகளை மேற்கொள்ளும் வகையில் 907 சுகாதாரப் பணியாளர்களும், 194 பாதுகாப்பு பணியாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இதனை கண்காணித்திட தனிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தேவைக்கேற்ப இதனை அதிகப்படுத்திடவும் மாவட்ட ஆட்சியருக்கு அரசின் சார்பில் அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது. பாதுகாப்பு பணியில் 6,000க்கும் மேற்பட்ட காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுவதோடு, 420 தீயணைப்பு மற்றும் மீட்பு பணி வீரர்கள் வாகனத்துடன் தயார் நிலையில் இருப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடற்கரை பகுதிகளில் தடுப்புகள் அமைப்பதற்கும், கடலில் நீராடும் பக்தர்களுக்கு குறிப்பாக பாதுகாப்பை கருத்தில் கொண்டு கடலோர பாதுகாப்பு படை பயிற்சி பெற்ற வீரர்களை அந்த பகுதியில் நிறுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் காவல்துறை கூடுதல் தலைமை இயக்குநர் தலைமையில் நாளைய தினம் பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரடியாக ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டிருக்கின்றார்கள். இத்திருக்கோயிலைச் சுற்றி ஏற்கனவே 60 கண்காணிப்பு கேமராக்கள் செயல்பாட்டில் உள்ளன. மேலும் 100 கண்காணிப்பு கேமராக்கள் கூடுதலாக பொருத்தப்பட இருக்கின்றன. துறையின் ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் திரு. சுகி சிவம், திருமதி தேச மங்கையர்க்கரசி ஆகியோர் ஒருங்கிணைந்து நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களை கொண்டு ஆன்மிக சொற்பொழிவுகள், கலைநிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகளை ஆறு நாட்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேள்விச் சாலையில் 64 ஓதுவா மூர்த்திகளை கொண்டு பன்னிரு திருமுறைகள், திருப்புகழ், கந்தர் அனுபூதி உள்ளிட்ட செந்தமிழ் வேதங்கள் முற்றோதல் நடைபெற இருக்கின்றது. அனைத்து நிகழ்ச்சிகளும் நேரடி ஒளிபரப்பு மூலம் திருக்கோயில் வளாகம், பேருந்து நிறுத்தும் இடங்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்துமிடங்களில் 60 அகன்ற எல்இடி திரை மூலம் ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ட்ரோன்கள் மூலமாக 20 இடங்களில் புனித நீர் தெளிப்பதற்கு உண்டான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. ஒன்றாம் தேதியில் இருந்து ஏழாம் தேதி வரையில் நாள் முழுவதும் அறுசுவை அன்னதானம், வடை பாயாசத்துடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குடமுழுக்கு பெருவிழா ஏழு நாட்கள் நடைபெறுவதை 10 நாட்களுக்கு நீட்டிக்கச் செய்யலாம் என்ற துறையின் செயலாளர், ஆணையர், மாவட்ட ஆட்சியர் மற்றும் அரசு உயர் அலுவலர்களின் ஆலோசனை கூறி இருக்கிறார்கள். ஆகவே 10 ஆம்தேதி வரையில் நீட்டிப்பதற்கு உண்டான வழிவகைகளை காண இருக்கின்றோம். அதேபோல் குடமுழுக்கு நன்னீராட்டிற்கு பிறகு சுமார் ஒரு லட்சம் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கவும், 10 இடங்களில் அமைக்கப்படும் மருத்துவ முகாமினை கூடுதலாக அமைப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது நகராட்சி சார்பில் கழிவுகள் மற்றும் குப்பைகளை உடனுக்குடன் அகற்றுவதற்கு சுமார் 200 நபர்கள் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணி அமர்த்தப்பட இருக்கின்றார்கள். இந்தக் குடமுழுக்கை முன்னிட்டு 20 இடங்களில் திருக்கோயிலின் சார்பில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்குவதற்கு உண்டான ஏற்பாடுகளை செய்திருக்கின்றோம். அவசர மருத்துவ உதவிக்கு ஆம்புலன்ஸ் வசதிகள், குடமுழுக்கு முடிந்து ஊர் திரும்புபவர்களுக்கு தேவையான போக்குவரத்து வசதி என அனைத்தையும் ஒவ்வொன்றாக பார்த்து பார்த்து திட்டமிட்டுள்ளோம்.

இந்த குடமுழுக்கை சீரும் சிறப்போடும் பக்தர்கள் மகிழ்கின்ற வகையில் நடத்திட அமைச்சர் என்ற முறையிலும் நானும், துறையின் செயலாளர், ஆணையாளர் ஆகியோர் எண்ணிலடங்கா முறை ஆய்வு செய்ததை நீங்களே அறிவீர்கள். இத்திருக்கோயில் குடமுழுக்கிற்கு மேற்கொண்டு கூடுதலாக ஏதாவது வசதிகள் தேவைப்படுமாயின் உங்களின் கருத்துகளையும் அறிந்து, அதனை ஆய்வு செய்து சாத்தியக்கூறுகள் இருந்தால் நிச்சயம் அதையும் ஏற்பாடு செய்வோம்.

திருக்கோயில்களில் ஏற்கனவே சமஸ்கிருதத்தில் குடமுழுக்கு செய்து கொண்டிருப்பார்கள். அதோடு இணைந்து தமிழிலும் குடமுழுக்கு நடத்தப்படும், பழனி, வயலூர், மருதமலை திருக்கோயிலில் என்ன நடைமுறையை பின்பற்றினோமோ அதை நடைமுறையை இந்த திருக்கோயிலின் அர்ச்சகர்கள், போர்த்திகள் மற்றும் தமிழ் கற்ற வேத விற்பனர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இந்த முடிவினை மேற்கொண்டு இருக்கின்றோம். ஆகவே, தமிழ் வேத மந்திரம் நிச்சயமாக குண்டத்தில் ஒலிக்கும். குடமுழுக்கின்போது மேல்தளத்தில் பக்தர்கள் அனுமதிப்பது குறித்து ஏற்கனவே பொதுப்பணித் துறை ஒரு உறுதித் தன்மை சான்றிதழை அளித்து இருக்கின்றது. எவ்வளவு நபர்களை கூடுதலாக அனுமதிக்க முடியுமோ அவ்வளவு நபர்களை அனுமதிக்க வேண்டும் என்பது தான் அரசினுடைய துறையினுடைய எண்ணம். அதற்கேற்றார் போல் மீண்டும் ஒருமுறை ஆய்வு செய்து உறுதித்தன்மை சான்றிதழை பெற்ற பிறகு அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கையை முறையாக தெரிவிக்கின்றோம்.

குடமுழுக்கு விழாவிற்கு கடந்த காலங்களில் திருக்கோயிலின் நிதி தான் அதிக அளவு பயன்படுத்தப்பட்டது என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். முதலமைச்சர் நேற்றைய முன்தினம் இந்த குடமுழுக்கு குறித்த கலந்தாலோசனையின் போது பக்தர்களின் வசதிக்காக சாலைகளை மேம்படுத்திட நெடுஞ்சாலை துறைக்கு உத்தரவிட்டுள்ளார்கள். பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் சுமார் 13 கோடி ரூபாய் அளவில் சாலைகளை புதுப்பித்து செப்பனிடுகின்ற பணிகளையும் மேற்கொள்ள பணிகளை முடுக்கி விட்டுள்ளார். தலைமைச் செயலாளர் அவர்களும் இக்குடமுழுக்கு பணிகள் தொடர்பாக கூட்டம் நடத்தியுள்ளார். அரசு முழு அளவில் இந்த குடமுழுக்கின் தொடர் நடவடிக்கைகளை கண்காணித்துக் கொண்டிருக்கிறது.

குடமுழுக்கின் முந்தைய நாளிலிருந்து அடுத்த நாள் மதியம் வரையில் சண்முகர் தரிசனம் மட்டும் தான் சூழ்நிலைக்கு ஏற்றார் போல் உள்ளூர் விடுமுறை தேவை என்றால் முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுசென்று முடிவெடுக்கப்படும். கடல் உள்வாங்கும் பிரச்சனை மற்றும் கடல் அரிப்பு குறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று நீர்வளத்துறை மூலம் கடற்கரையில் கற்களை பதிக்கின்ற பணிக்கு உத்தரவிட்டதன் பேரில் அதற்காக செலவினம் 30 கோடி ரூபாயில் 50 சதவீதத்தை அரசே செலுத்துகிறது. பாதியை திருக்கோயில் மற்றும் துறையின் சார்பிலே அளிக்கின்றோம். இதுவரையில் எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலையத்துறைக்கு அரசு மானியமாக 1035 கோடி ரூபாயை இந்த நான்காண்டுகளில் தமிழக முதல்வர் திருப்பணி களுக்காகவும், ஒரு கால பூஜை நடைபெறுவதற்காகவும், திருக்கோயில் அர்ச்சகர் மற்றும் பணியாளர் நலன்களை பாதுகாப்பதற்காகவும் வழங்கியுள்ளார். இந்த ஆட்சியை பொறுத்த அளவில் எங்கும் தமிழ் எதிலும் தமிழ், எப்போதும் தமிழ், இப்போதும் தமிழ் என அனைத்து இடங்களிலும் தமிழ் ஒலிக்கும். உங்களோடு சேர்ந்து நாங்களும் இருப்போம் அந்த இனிய தமிழ் நாதத்தை நம் செவிகள் வாயிலாக கேட்போம் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மருத்துவர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி. பழனி, தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், தலைமைப் பொறியாளர் பொ.பெரியசாமி, இணை ஆணையர்கள் எம். அன்புமணி, எஸ்.ஞானசேகரன், திருக்கோயில் தக்கார் ஆர். அருள் முருகன், திருச்செந்தூர் வருவாய் கோட்டாட்சியர் சுகுமாறன், வட்டாட்சியர் பாலசந்திரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்,

# 50 ஆரம்ப சுகாதார நிலையங்கள் - முதல்வர் திறந்து வைக்கிறார்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!



சென்னை, ஜூன் 19 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.06.2025) சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொதும ருத்துவமனையில், 2025-26 மானியக்கோரிக்கை அறிவிப்பின்படி, டயாலிசிஸ் சிகிச்சை பெறுபவர்களுக்கு சிறப்பு புரதச் சத்து மிக்க உணவு வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைத்தார்கள். பிறகு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

**2025-26 மானியக்கோரிக்கை அறிவிப்பு எண் 11 – செயலாக்கம்**

தமிழ்நாட்டின் நிதிநிலை அறிக்கையில் 118 அறிவிப்புகள் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் அறிவிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் அறிவிக்கப்படும் அறிவிப்புகள் அனைத்தும் செயலாக்கம் பெற்று மக்களுக்கு மருத்துவ பயன் தந்துக் கொண்டிருக்கிறது. மருத்துவத் துறை வரலாற்றில் ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் எந்த வகையில் செயலாக்கம் பெற்றிருக்கிறது என்கின்ற விவரங்கள் அடங்கிய புத்தகங்களும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அறிவிப்புகளாக செயல்படுத்தப் பட்டு வருகிறது. நேற்றைக்கூட 3 அறிவிப்புகள் செயல்படுத்தப் பட்டது. இன்றைக்கு 2025-26 மானியக் கோரிக்கை அறிவிப்பு எண் 11, தமிழ்நாட்டில் டயாலிசிஸ் சிகிச்சை பெறுபவர்களுக்கு புரதச் சத்து நிறைந்த உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்படும் என்று நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மருத்துவமனைகளில் 9180 பேருக்கு டயாலிசிஸ் வழங்கப்பட்டு வருகிறது. டயாலிசிஸ் சேவை என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இன்றைக்கு இலவசமாக வழங்கப்படும் என்பதை தொடங்கி காப்பீட்டு திட்டத்தில் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு தனியார் மருத்துவமனைகளில் வாரத்திற்கு 2 முறை டயாலிசிஸ் செய்யப்படும்போது ரூ.2000/- என்கின்ற வகையில் மாதத்திற்கு குறைந்தது ரூ.25,000/- வரை செலவாகும். ஏழை, எளியவர்களுக்கு சிறுநீரக பாதிப்பு என்று வந்தாலே அவர்களுடைய உயிர்களுக்கு உத்தரவாதம் இல்லை என்கின்ற அளவில் மிகப்பெரிய பாதிப்பை சந்தித்து வந்தனர். இந்த நிலையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் டயாலிசிஸ் சேவையை இலவசமாக வழங்கும் பணியினை தொடங்கி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

**டயாலிசிஸ் கருவிகள்**

இந்த அரசு பொறுப்பு ஏற்பதற்கு முன்பு தமிழ்நாடு முழுவதிலும் 985 டயாலிசிஸ் யூனிட்கள் பயன்பாட்டில் இருந்தது. கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 302 புதிய டயாலிசிஸ் இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஆக தமிழ்நாடு முழுவதிலும் 139 அரசு மருத்துவமனைகளில் 1287 டயாலிசிஸ் இயந்திரங்கள் பயன்பாட்டில் இருக்கிறது. இதில் தினந்தோறும் 9180 பேர் டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வருகிறார்கள். பொதுவாக டயாலிசிஸ் சிகிச்சை பெற்றதற்கு பிறகு மிகப் பெரிய அளவில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து சோர்விற்கு உள்ளாகிறார்கள். சோர்விற்கு உள்ளாகும் டயாலிசிஸ் நோயாளர்களுக்கு உணவு பொருட்கள் உடனடியாக வழங்க வேண்டியது என்பது அவசியமான ஒன்றாகிறது. அந்தவகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 100 மிலி பால், 2 முட்டை, கருப்பு/வெள்ளை சுண்டல், 20 கிராம் எடையுள்ள 3 பிஸ்கட், புரதம் 27 கிராம்/400 KCAL ஆகிய உணவுப் பொருட்கள் வழங்கும் திட்டம் இன்று தொடங்கப்பட்டிருக்கிறது. முதற்கட்டமாக சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இன்று தொடங்கியிருக்கிறோம். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும் இன்னும் ஒரு சில நாட்களில் பயன்பாட்டிற்கு வர உள்ளது. இப்போதுகூட இம்மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை ஒவ்வொருவரிடம் விசாரித்தபோது ஒருவர் அரக்கோணத்தில் இருந்து வருவதாகவும், இன்னொருவர் கும்மிடிப்பூண்டியிலிருந்து வருவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். டயாலிசிஸ் முடிந்தவுடன் அவர்கள் பேருந்துகளை பிடித்து சொந்த ஊருக்கு செல்வதற்குள் பெரிய அளவிலான சிரமத்திற்கு உள்ளாவார்கள். எனவே அவர்களுக்கு வழங்கப்படும் புரதச்சத்துள்ள உணவுப் பொருட்கள் மிகப் பெரிய அளவிலான உதவியாக இருக்கும் என்கின்ற வகையில் இத்திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளது.

**சவாலான அறுவை சிகிச்சைகள்:–**

சென்னை இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் பல்வேறு வகையிலான சிறப்பு மருத்துவங்களை தொடர்ந்து மருத்துவர் குழு அளித்து பல்வேறு சிகிச்சைகளை கடந்த 190 ஆண்டுகளாகவே செய்து வருகிறது. அந்தவகையில் இம்மருத்துவமனையில் தீர்க்க முடியாத, தீர்க்கப்படாத பல்வேறு தனியார் மருத்துவமனைகளில் தீர்வு கிடைக்காத சிகிச்சை என்கின்ற வகையில் இம்மருத்துவமனை தொடர்ந்து செயலாற்றி வருகிறது. பத்திரிக்கையாளர்களாகிய உங்கள் முன் 3 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். குறிப்பாக 3 வயது குழந்தை ஜெர்மன் டோனருடன் எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. மிக சவாலான இந்த சிகிச்சையில் பயன்பெற்ற குழந்தையின் தந்தை அரசிற்கு நன்றி தெரிவித்தது நீங்கள் பார்த்திருப்பீர்கள். அதேபோல் இன்னொரு 16 வயதுள்ள சிறுமி பாதி எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை அவருக்கும் செய்யப்பட்டு ஆபத்தான நிலையிலிருந்து தற்போது உயிர் பிழைத்திருக்கிறார்.

அதேபோல் மேற்கு வங்கத்தைச் சார்ந்த 29 வயது பெண் உயிருக்கு ஆபத்தான நிலையில் எலும்பு மஜ்ஜை நோயினால் பாதிக்கப்பட்ட அவருக்கு சிகிச்சை முடிந்து தற்போது குணமடைந்திருக்கிறார். அதேபோல் இன்னொரு தோழர், கழுத்தில் தைராய்டு செல் அகற்றப்பட்டு புற்றுநோய் பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டு முழுமையாக அகற்றப்பட்டு இதற்கு முன்னாள் பேசுவதற்கு சிரமப்பட்ட அந்த தோழருக்கு அறுவை சிகிச்சை முடிந்தபிறகு தற்போது பேசும் நிலையில் தற்போது இருந்துக் கொண்டிருக்கிறார். இப்படி பல்வேறு சிறப்பு மிக்க சிகிச்சைகளை இம்மருத்துவமனை அளித்து வருகிறது.

**மக்கள் நலத்திட்டங்கள்:–**

முதலமைச்சர் அவர்களின் அரசு பொறுப்பேற்றபிறகு, மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் என்றால் கிருஷ்ணகிரி மாவட்டம் சாமனப்பள்ளி, இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48 திட்டம் என்றால் மேல்மருவத்தூர், பாதம் பாதுகாப்போம் திட்டம் என்றால் சென்னை, அதேபோல் இதயம் பாதுகாப்போம் திட்டம் என்றால் கோவை மலுமிச்சம்பட்டி, மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம் என்றால் நாகர்கோவில், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம் என்றால் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஹீண்டாய் கம்பெனி, இப்படி ஒவ்வொன்றிற்கும் ஒரு இடம் உள்ளது. அந்தவகையில் இன்றைக்கு புதிய திட்டம் செயல்படுத்தப்படும் இராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை இன்னும் ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும் இந்தியாவிலேயே ஏன் உலகளவில் டயாலிசிஸ் நோயாளர்களுக்கு புரதச்சத்து உணவு வழங்கும் திட்டம் என்பது தொடர்ந்து வரலாற்றில் நீடித்து நிலைத்திருக்கும். எனவே இந்த திட்டத்தை தொடங்கிவைப்பத்தில் பெருமை அடைகிறோம்.

**208 நகர்ப்புறநலவாழ்வு மையம் விரைவில் திறப்பு**

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022-23 காலக்கட்டத்தில் 06.06.2023 இல் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் தமிழ்நாட்டில் அமையும் என்று அறிவித்தார்கள். ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு உதவியாளர் என்கின்ற வகையில் மருத்துவ கட்டமைப்பு டெல்லியில் உள்ள ஆம்ஆத்மி மொகிலா கிளினிக் போல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். 23 மாநகராட்சிகளிலும், 63 நகராட்சிகளிலும், செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு ஒரு வருடத்தில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை சென்னையில் இருந்து தமிழ்நாடு முழுவதிலும் உள்ள மருத்துவக் கட்டமைப்புகளை திறந்து வைத்தார்கள். மீதமிருக்கும் 208 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை வருகின்ற 03.07.2025 அன்று சென்னை அடையார் சாஸ்திரி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து மற்ற தமிழ்நாட்டில் 207 இடங்களில் கட்டப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையங்களையும் திறந்து வைக்க உள்ளார்கள். தமிழ்நாட்டின் புதிய மருத்துவக் கட்டமைப்பு என்கின்ற வகையில் 208 புதிய நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக பயன்பாட்டிற்கு வர உள்ளது. அதேபோல் 2022-23 இல் 50 இடங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்கள் உருவாகும் என்று அறிவித்தார்கள். அந்தவகையில் அந்த மருத்துவமனைகளும் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்கள் நியமனமும் முடிவுற்று வரும் நிலையில் 03.07.2025 அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது என்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு. அருண்தம்புராஜ், சென்னை மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.சாந்தாராம், மருத்துவமனை கண்காணிப்பாளர் மரு. விஜயராகவன் மற்றும் மருத்துவப் பேராசிரியர்கள் உடனிருந்தனர்.